நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்1, திருநெல்வேலி

**முன்னிலை : திருமதி. D. திரிவேணி, எம்.ஹைச்.ஆர்., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, திருநெல்வேலி

2024 வது வருடம் ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 2046/2023**

**CNR.No.TNTL04-029419-2023**

அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

பாளையங்கோட்டை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவு காவல் நிலையம்,

குற்ற எண்.839/2023 ....... குற்றமுறையீட்டாளர்

// எதிர் //

1) மணிபாரதி, வயது 19/2023

த.பெ. மாரிமுத்து,

1/35, சந்தன மாரியம்மன் கோவில் தெரு,

வெள்ளக்கோவில்,

பாளையங்கோட்டை,

திருநெல்வேலி மாவட்டம்.

2) நவீன், வயது 21/2023

த.பெ. பிரேம்குமார்,

1/24, சந்தன மாரியம்மன் கோவில் தெரு,

வெள்ளக்கோவில்,

பாளையங்கோட்டை,

திருநெல்வேலி மாவட்டம்.

3) முத்துசெல்வம், வயது 19/2023

த.பெ. செல்வின்,

108, சந்தன மாரியம்மன் கோவில் தெரு,

வெள்ளக்கோவில்,

பாளையங்கோட்டை,

திருநெல்வேலி மாவட்டம். ....... எதிரிகள்

இந்த வழக்கு 16.08.2023 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, திருநெல்வேலி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளின் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. இராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரிகளின் மீது பாளையங்கோட்டை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கை** :

இவ்வழக்கின் 1வது சாட்சி சரவணன், பாளையங்கோட்டை, வெள்ளக்கோவில், சந்தன மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறார். 1வது எதிரி மணிபாரதி, 2 வது எதிரி நவீன், 3 வது எதிரி முத்துசெல்வம் ஆகியோர் அதே ஊரைச் சேர்ந்தவர்கள். 1வது சாட்சிக்கும், 1 வது எதிரிக்கும் ஏற்கனவே சந்தன மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது பிரச்சனை இருந்து வந்துள்ளது. அதன் முன்விரோதம் காரணமாக, 24.07.2023 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு வெள்ளக்கோவில் துவக்கப்பள்ளி அருகில் 1 வது சாட்சி நின்று பேசிக் கொண்டிருக்கும் போது எதிரிகள் மூவரும் சேர்ந்து 1வது சாட்சியை பார்த்து, "ஏல தேவடியாமவனே" என்று அசிங்கமாக பேசியும், கைகளால் தாக்கியும் குற்றச்செயல் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 352-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) பின்னர் இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான 1 முதல் 3 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் 1 முதல் 3 எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று கூறிக்கொண்டார்கள். இந்நிலையில் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், 1 முதல் 3 எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 294(பி), 352-ன் கீழான குற்றத்திற்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் 1 முதல் 3 எதிரிகளின் மீது குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றச்சாட்டுகள் குறித்து தமிழில் படித்து விளக்கிக் கூறி வினவியபோதும் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று கூறிக்கொண்டார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டன.

4) **அரசு தரப்பு வழக்கின் சாட்சியம் பின்வருமாறு** :

i) அ.சா.1 சரவணன் தனது சாட்சியத்தில் நான் வெள்ளக்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு தேர்வுக்கு படித்து கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கு குறித்து எதுவும் எனக்கு தெரியாது. நான் வேறொரு வழக்கு சம்பந்தமாக காவல் நிலையம் சென்றிருந்த போது அங்கு போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதாகும். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 குமரேசன் தனது சாட்சியத்தில் நான் வீரவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் நான் திருமணம் செய்த பெண்ணின் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 எனது மனைவியின் தம்பி. இந்த வழக்கு குறித்து எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

iii) அ.சா.3 மாரிமுத்து தனது சாட்சியத்தில் நான் வெள்ளக்கோவிலில் குடியிருக்கிறேன். நான் ஒர்க் ஷாப்பில் குடியிருந்து வருகிறேன். வழக்கு குறித்து எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் காணப்படும் 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் காவல் நிலையம் சென்றிருந்த போது போலிசார் என்னிடம் வாங்கினார்கள். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

iv) அ.சா.4 திரு. சுப்பையா தனது சாட்சியத்தில் நான் தற்போது பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அங்கு பணிபுரிந்த தலைமை காவலர் கெங்கண்ணா மற்றும் உதவி ஆய்வாளர் பழனிமுருகன் ஆகியோருடன் பணியாற்றிய அனுபவம் எனக்கு இருப்பதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 24.07.2023 ஆம் தேதி 10.30 மணிக்கு தலைமை காவலர் கெங்கண்ணா அவர்கள் நிலைய அலுவல் பொறுப்பில் இருந்த போது சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.839/2023, இதச பிரிவுகள் 294(பி), 323-ஆக வழக்கு பதிவு செய்து, அதன் அசலையும், புகார் மனுவையும் இணைத்து

கணம் ஜே.எம்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பியும், ஏனைய நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தார். அதனை பெற்றுக் கொண்ட விசாரணை அதிகாரி 24.07.2023 ஆம் தேதி 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரிமுத்து மற்றும் விக்னேஷ் ஆகியோர் முன்னிலையில் சுற்றுப்புறங்களை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் சரவணன், குமரேசன், மாரிமுத்து, விக்னேஷ் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் கெங்கண்ணா ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தார். பின்பு எதிரிகளை இவ்வழக்கில் கைது செய்து பின் பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் காவல் நிலைய பிணையில் விடுவித்தார். பின்பு இவ்வழக்கின் சட்டப்பிரிவினை பிரிவுகள் 294(பி), 352 இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். பின்னர் சாட்சிகளின் விசாரணைகளில் இருந்தும், அவரது புலன் விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது 31.07.2023 ஆம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 352-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது என சாட்சியமளித்துள்ளார்.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் 1 முதல் 3 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவியபோது 1 முதல் 3 எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று மறுத்துக் கூறினார்கள். 1 முதல் 3 எதிரிகளின் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கப்பாற்பட்ட நிலையில், நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) அரசு தரப்பு வழக்கானது 1வது சாட்சி சரவணன், பாளையங்கோட்டை, வெள்ளக்கோவில், சந்தன மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறார். 1வது எதிரி மணிபாரதி, 2வது எதிரி நவீன், 3வது எதிரி முத்துசெல்வம் ஆகியோர் அதே ஊரைச் சேர்ந்தவர்கள். 1வது சாட்சிக்கும், 1வது எதிரிக்கும் ஏற்கனவே சந்தன மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது பிரச்சனை இருந்து வந்துள்ளது. அதன் முன்விரோதம் காரணமாக, 24.07.2023 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு வெள்ளக்கோவில் துவக்கப்பள்ளி அருகில் 1வது சாட்சி நின்று பேசிக் கொண்டிருக்கும் போது எதிரிகள் மூவரும் சேர்ந்து 1வது

சாட்சியை பார்த்து, "ஏல தேவடியாமவனே" என்று அசிங்கமாக பேசியும், கைகளால் தாக்கியும் குற்றச்செயல் புரிந்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 352-ன் படி குற்றப்பத்திரிக்கை முன்னிலைப்படுத்தப்பட்டு உள்ளது. மேற்படி பிரிவுகளின் கீழ் இவ்வழக்கின் எதிரிகளை தண்டிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

8) இந்நிலையில் 1 முதல் 3 எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும். அவர்கள் தனது ஊரைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கு குறித்து எதுவும் தனக்கு தெரியாது. தான் வேறொரு வழக்கு சம்பந்தமாக காவல் நிலையம் சென்றிருந்த போது அங்கு போலிசார் தன்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதாகும் என்று கூறி அரசு தரப்பை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். இவ்வழக்கின் நேரடி சம்பவ சாட்சியான அ.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும். ஆனால் இவ்வழக்கு குறித்து எதுவும் தனக்கு தெரியாது என்று சொல்லி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தன்னுடைய சாட்சியத்தில் வழக்கு குறித்து எதுவும் தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் காணப்படும் 1வது கையொப்பம் மட்டும் தன்னுடையதாகும் என்று சொல்லி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக சிறப்பு உதவி ஆய்வாளரான சுப்பையா என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கினை பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடம் சென்று சாட்சிகளின் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தது பற்றியும், பின்னர் இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் அரசு தரப்பு சொல்வதுபோல, அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 24.07.2023 ஆம் தேதி இரவு 09.00 மணியளவில் தான் வெள்ளக்கோவில் துவக்கப்பள்ளி அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது அங்கு வந்த இவ்வழக்கின் எதிரிகள் மூவரும் தன்னை பார்த்து அசிங்கமாக பேசி, கைகளால் தாக்கியதாக குறிப்பிட்டு எந்த சாட்சியமும் அளித்துக் கொள்ளவில்லை.

9) இந்நிலையில் அரசு தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ் சாட்சிகளாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாத பட்சத்தில், விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளை தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) முடிவில் அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகளின் மீதான இதச பிரிவுகள் 294(பி), 352 ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 3 எதிரிகளுக்கு அளித்து, 1 முதல் 3 எதிரிகளின் மீதான இதச பிரிவுகள் 294(பி), 352-ன் கீழான குற்றத்திற்கு 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1)-ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து 1 முதல் 3 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

11) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லாததால் அதுகுறித்து உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 20-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D THRIVENI

Digitally signed by D THRIVENI
Date: 2024.08.20 17:42:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

திருநெல்வேலி

**அரசு தரப்பு சாட்சிகள் :**

1. அ.சா.1 சரவணன்
2. அ.சா.2 குமரேசன்
3. அ.சா.3 மாரிமுத்து
4. அ.சா.4 திரு. சுப்பையா (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

1. அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் மட்டும்

2. அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள அ.சா.3 ன் கையொப்பம் மட்டும்

3. அ.சா.ஆ.3 புகார் மனு

4. அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை

5. அ.சா.ஆ.5 பார்வை மகஜர்

6. அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம்

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**அரசு தரப்பு சான்று பொருள்கள்** : இல்லை

D THRIVENI

Digitally signed by D THRIVENI
Date: 2024.08.20 17:42:34 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**திருநெல்வேலி**